1978 செப்டம்பர் 1]

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

80. வேலூரில் உள்ள கிருத்துவ மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மகளிர் கிருத்துவச் சங்கச் சிற்றுண்டிச் சாலைக்கு, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் விதித் துறைகளிலிருந்தும், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவன விதிகளின் 38 ஆவது விதியைச் சேர்ந்த (3) துணை விதியில் கண்டுள்ள விதித் துறைகளிலிருந்தும் விலக்களிப்பது குறித்த, தொழிலாளர் நல—வேலை வாய்ப்புத் துறையின் 28—7—1978 ஆம் தேதியிடப் பெற்ற 800 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

81. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு, மாநில வீட்டு வசதி வாரிய கணக்குகளை வைத்து வருதல் (அரசு, இந்திய ஸ்டேட் வங்கி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த, வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 28—7—1978 ஆம் தேதியிடப் பெற்ற 1155 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு, 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (9) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

82. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய மன்ற (துணைத் தலைவர் தேர்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்த, ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 4—7—1978 ஆம் தேதியிடப் பெற்ற 1076 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]